**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**
**HMOP.No.80/2024**

பெயர் :– கற்பகம் (P.W.–2)

த/பெ. :– அன்பழகன்.

தேதி :– 08.07.2025.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை**:–

நான் அவையம்பாள்புரத்தில் குடியிருந்து வருகிறேன். எனது அம்மாவின் வீடு உளுத்துக்குப்பை என்ற ஊரில் உள்ளது. எதிர்மனுதாரர் எனது தம்பியாவார். எதிர்மனுதாரருக்கும் மனுதாரருக்கும் நான், அப்பா, அம்மா அனைவரும் சேர்ந்துதான் திருமணம் செய்து வைத்தோம். எனக்கு நான்கு சகோதரிகள் உள்ளனர். நாங்கள் அனைவரும் நல்லமுறையில் பேச்சு வார்த்தையில் தான் உள்ளோம். எனது கணவரின் பெயர் முருகையன். அவர் சென்னையில் வசித்து வேலை பார்த்து வருகிறார். நாங்கள் சுமூகமான உறவு முறையில் தான் உள்ளோம். பேச்சு வார்த்தையில் உள்ளோம். எனது தம்பி சிங்கப்பூரில் வேலை பார்த்து வந்தார். எனது தம்பி மற்ற சகோதரிகளை விட என்னிடம் மிகுந்த அன்புபாராட்டி வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். எனது தம்பி சம்பாதித்த பணத்தை எல்லாம் என் மூலமாக வரவு, செலவு செய்து வந்தார் என்றால் சரியல்ல.

எனது அம்மா என்னுடன் இனக்கமாக வாழ்ந்து வந்தார். தற்போது எனது குடும்பத்துடன் எந்த பேச்சு வார்த்தையும் இல்லை. மனுதாரரும், எதிர்மனுதாரர் திருமணம் ஆகி எத்தனை நாட்கள் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்றால் 25 நாட்கள் சேர்ந்து வாழ்ந்தார்கள். மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே முதலிரவு என்ற சம்பிரதாயம் நடந்ததா என்று கேள்விப்பட்டீர்களா என்றால் நடந்தது. வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது மகள் எதிர்மனுதாரரை ஆரம்பத்திலிந்தே பிடிக்காமல் இருந்து வந்தார் என்றாலும், எனது தம்பியின் வெளிநாட்டில் சம்பாதித்து வருவதால் அந்த வருமானத்திற்காக வேண்டி உறவுமுறைக்காகவும் திருமணத்தை நான் தான் நடத்தினேன் என்றால் சரியல்ல, திருமணம் முடிந்து மனுதாரர் மாமியார் வீட்டில் தான் இருந்தார். எதிர்மனுதாரர் வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறார்.

இந்த காலகட்டத்தில் மனுதாரர் அவரது மாமியார் வீட்டிலிருந்து வீட்டை

விட்டு வெளியேறிவிட்டார் என்றால் சரிதான். அவர் எங்கே போனார் என்ற விபரம் தெரியுமா என்றால் திருப்பூர் வேலைக்கு சென்றதாக கேள்விப்பட்டேன். வேலைக்கு சென்ற விபரத்தை வீடியோ காலில் பார்த்து தெரிந்துகொண்டேன். அவர் வேலைக்கு செல்லவில்லை என்றாலும், அவருக்கு விரும்பிய நபருடன் தெரிந்த இடத்தில் தங்கிவிட்டார் என்றால் சரியல்ல. அதன் பின்னர் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து போலீசார் தேடினார்களா என்றால் இல்லை. வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும், எதிர்மனுதாரரின் தாயார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து போலீசார் தேடுவதை தெரிந்துகொண்டுதான் மனுதாரர் ஊருக்கு வந்தார் என்றால் சரியல்ல. அதன் பிறகும் மனுதாரர் அவரது மாமியார் வீட்டில் தான் வாழ்ந்தார் என்றால் சரிதான். மனுதாரரின் மாமியாரும் எனது அம்மாவும் ஒன்றுதான் என்றால் சரிதான்.

எனது அம்மா வயதானவர் என்றால் சரிதான். அவர் 100 நாட்கள் வேலைக்கு சென்று வருகிறார் என்றால் சரிதான். மனுதாரர் வீட்டை விட்டு எப்போது வெளியே வந்தார் என்றால் 24.05.2024 அன்று வீட்டை விட்டு வெளியேறி எனது வீட்டிற்கு வந்துவிட்டார். அன்று இரவு 12.30 மணியளவில் அடித்து துன்புறுத்தியதாக எனது மகள் கூறியதால் நான் சென்று அழைத்து வந்ததாக சாட்சி கூறுகிறார். நத்தம் கிராத்தில் வசிக்கும் ஆரோக்கியதாஸ் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. அவருக்கும் எனக்கும் தொடர்பு உள்ளதாக கூறுவது தவறு. ஆரோக்கியதாஸ் தான் மனுதாரரை அழைத்துக்கொண்டு திருப்பூரில் தங்கிவந்தார் என்றால் சரியல்ல. மனுதாரர் எந்த நேரத்திலும் போனிலே பேசிக்கொண்டு இருப்பார் என்றாலும், குடும்பத்தை சரிவர நடத்தவில்லை என்றாலும் சரியல்ல. மனுதாருக்கு வேறு நபருடன் வாழ விருப்பம் என்றும், நீங்கள் தான் அவரது விருப்பத்திற்கு மாறாக எதிர்மனுதாரரை திருமணம் செய்து வைத்து இருவரின் வாழ்வையும் பாழ்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல.

எதிர்மனுதாரரின் வீடு உள்ளிட்ட அனைத்து விஷயங்களையும் மனுதாரர் தான் நிர்வாகம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக திட்டமிட்டு பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது கணவரோடு நான் சேர்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல. எனது மகளுக்கு செய்த அனைத்து சீர்வரிசை பொருட்களையும் எடுத்துச் சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தற்சமயம் வெளிநாட்டில் வேலை செய்யவில்லை என்றால் சரிதான். அவர் தற்சமயம்

அவரது அம்மா வீட்டில் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். நானும் எனது மகளும், எனது மகனும் தனியாக வாடகை வீட்டில் வசித்து வருகிறோம். நானும் எனது மகளும் மனம்போன போக்கில் வாழ்ந்து வருகிறோம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தற்சமயம் வருமானம் இன்றி வறுமையில் வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வெளிநாட்டில் சம்பாதித்த பணம் அனைத்தையும் தனது அக்கா மற்றும் மாமியார் என்ற பந்தபாசத்தில் என்னிடம் தான் கொடுத்து வரவு செலவு செய்தார் என்றால் சரியல்ல. நான் தான் தம்பி சம்பாதித்த பணத்தை எல்லம் பெற்றுக்கொண்டு அவரை ஏமாற்றி அவரது வாழ்க்கையை பாழ்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல.

தற்சமயம் எனக்கும் எனது சகோதரிகளுக்கும் இடையே எந்தவிதமான உறவும் கிடையாது என்றால் சரியல்ல. எனது அம்மாவின் வீட்டை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தன்னுடைய மகனின் வாழ்க்கை பாழ்பட்டுவிட்டது என்ற ஏக்கத்தில்தான் இறந்துவிட்டார் என்றால் அவர் ஏற்கனவே நோய்வாய் பட்டு இருந்தார். மனுதாரர் தனது மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.